**செய்தி வெளியீடு எண் : 1262** **நாள் : 28.06.2023**

**நீர்வளத்துறை**

**செய்தி வெளியீடு**

திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களைச் சார்ந்த 10 அமராவதி பழைய வாய்க்கால்களின் (அலங்கியம் முதல் கரூர் வலது கரை வரை) பாசனப் பகுதிகளில் உள்ள நிலங்களுக்கு அமராவதி ஆற்று மதகு வழியாக வினாடிக்கு 1160 கன அடி வீதம் 1002.24 மி.க அடிக்கு மிகாமலும், திருப்பூர் மாவட்டத்திலுள்ள புதிய பாசன நிலங்களுக்கு அமராவதி பிரதானக் கால்வாய் வழியாக வினாடிக்கு 440 கன அடி வீதம் 380.16 மி.க. அடிக்கு மிகாமலும் ஆக மொத்தம் 1382.40 மி.கன.அடிக்கு மிகாமல் 29.06.2023 முதல் 09.07.2023 முடிய 10 நாட்களுக்கு மிகாமல் நிலையிலுள்ள பயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு சிறப்பு நனைப்புக்கும், குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கும் அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் பழைய பாசனப் பகுதிகளிலுள்ள 21867 ஏக்கர் நிலங்களும், திருப்பூர் மாவட்டத்தில் புதிய பாசனப் பகுதிகளிலுள்ள 25250 ஏக்கர் நிலங்களும் ஆக மொத்தம் 47,117 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும்.

**அரசு சிறப்புச் செயலாளர்,**
**நீர்வளத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in